**மூலக் காரணிகள் ஆவணம்**

| இலங்கை வங்கி ஹரித கெகுளு ஸ்மாட் | | | | |
|---|---|---|---|---|
| **கணக்கின் தன்மை** | **வாடிக்கையாளருக்கான நன்மைகள்** | **கட்டணங்களும்பொருத்தமான அறவீடுகளும்** | **தகுதி** | **முக்கியமான விதிகளும் நிபந்தனைகளும்** |
| 6 தொடக்கம் 18 வயதுக்கு இடைப்பட்ட இலங்கையை வதிவிடமாகக் கொண்ட சிறுவர்களுக்கான சேமிப்புக் கணக்கு. | • **வட்டி வீதம்**<br>சாதாரண வட்டி வீதத்தைவிட 1.5% அதிகமான வட்டிவீதம் (ரண் கெகுளு ஸ்மாட் கணக்கைப் போன்று)<br>தற்போதுள்ள வட்டி வீதங்களை https://www.boc.lk/ratestariff#rupee-deposit-rates என்ற இணைப்பிற் சென்று பார்வையிடவும்<br>• கணக்குரிமையாளருக்கான மருத்துவக் காப்புறுதி<br>• கணக்கைத் திறக்கும் பெற்றோர் / பாதுகாவலருக்கான ஆயுட் காப்புறுதி<br>• தரம் 5 புலமைப் பரீட்சையில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கான புலமைப் பரிசில்கள்<br>• கணக்கு மீதிகளையும் கொடுக்கல் வாங்கல்களையும் அறிந்துகொள்வதற்கான இலத்திரனியல் கூற்றுகள் / ஸ்மாட் பாஸ்புக் வசதி<br>• இலவச குறுஞ்செய்தி வசதி<br>• கணக்குப் புத்தகங்கள் வழங்கப்படுவதில்லை<br>பேண்தகைமை எண்ணக்கருவைக் கடைப்பிடித்தல்<br>பதிலாக விளக்கமான கணக்கு விபரங்களை உள்ளடக்கிய மீள்சுழற்சி செய்யப்பட்ட கடதாசி அட்டை வழங்கப்படும் | **ஆகக் குறைந்த ஆரம்ப வைப்பு ரூ.250/-**<br>**கணக்கை மூடுவதற்கான கட்டணம் – ரூ.500/-**<br>**கணக்கு மீதி தொடர்பான மாதாந்த சேவைக் கட்டணங்கள் இல்லை**<br>**வரிகள் –** வட்டியானது இலங்கை அரசாங்கத்தால் மற்றும்/அல்லது கட்டுப்பாட்டு அதிகாரசபையால் அல்லது வங்கியால் காலத்துக்குக் காலம் தேவைப்படுத்தப்படும் முற்பண வருமான வரி, பிற வரிகள், அறவீடுகள் (ஏதும் இருந்தால்), சட்டரீதியான வரிகள் என்பவற்றுக்கு உட்பட்டவையாகும். | 6 தொடக்கம் 18 வயதுக்கு இடைப்பட்ட இலங்கையை வதிவிடமாகக் கொண்ட சிறுவர்கள் எவரும் இக்கணக்கைத் திறக்கலாம்.<br>தனிநபர் கணக்கு மட்டுமே திறக்கப்பட முடியும்.<br>பெற்றோர் / பாதுகாவலர் பிள்ளையின் பெயரில் கணக்கைத் திறக்க வேண்டும்.<br>**கணக்கைத் திறப்பதற்கான நடைமுறைகள்**<br>இலங்கை வங்கியின் ரண் கெகுளு கணக்கினைத் திறப்பதற்கான விண்ணப்ப படிவத்தைப் பூர்த்திசெய்து பின்வரும் ஆவணங்களுடன் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் கையளித்தல் வேண்டும்.<br>- பிள்ளையின் பிறப்புச் சான்றிதழ் (படிவத்திலுள்ள விவரங்கள் பிறப்புச் சான்றிதழில் உள்ள விவரங்களுக்கு ஏற்ப உள்ளனவா என்பதனை உறுதிப்படுத்தவும்) மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் (இருப்பின்)<br>- பெற்றோர் / பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை (படிவத்திலுள்ள விவரங்கள் தேசிய அடையாள அட்டை உள்ள விவரங்களுக்கு ஏற்ப உள்ளனவா என்பதனை உறுதிப்படுத்தவும்)<br>- தேசிய அடையாள அட்டையிலுள்ள முகவரியும் தற்போது வசிக்கும் முகவரியும் வேறு வேறு எனின் | கணக்குரிமையாளர் 18 வயதை அடையும்போது இவ்வகைக் கணக்குகளுக்குப் பொருத்தமான தகுதிகளைப் பூர்த்தி செய்ய அவர் கொண்டிருக்கும் தகுதியைப் பொறுத்து இச்சேமிப்புக் கணக்கானது இளைஞர் சேமிப்புக் கணக்காக மாற்றப்படும்.<br>சிறார்கள் 18 வயதை அடையும் வரை பணம் மீளப் பெறுவதற்கோ கணக்கை மூடவோ அனுமதி வழங்கப்படமாட்டாது. ஆயினும் அவர்களுக்கான கல்வி, மருத்துவச் சிகிச்சைகள் போன்ற காரணங்களுக்காக வங்கியின் தற்றுணிபின் அடிப்படையில் மீளப் பெறுவதற்கோ கணக்கை மூடவோ அனுமதிக்கப்படும்.<br>கணக்கின் சிறப்புச் சலுகைகளைப் பெறுவதற்கு (உதாரணமாக காப்பீடு, பரிசுத்திட்டம், புலமைப்பரிசில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | • சேவைக் கட்டணங்கள் இல்லை | | முகவரியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்<br><br>- விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள முகவரியில் இருந்து கணக்குத் திறக்கப்படும் கிளை தொலை தூரத்தில் அமைந்திருந்தால் அக்கிளையில் கணக்குத் திறப்பதற்கான வலிதான காரணங்கள். | போன்றவை) கணக்கு மீதி/வைப்பு, வயது வரம்பு போன்ற அவ்வப்போது வங்கியால் தீர்மானிக்கப்படும் தேவைப்பாடுகளைக் கணக்குரிமையாளர் பூர்த்தி செய்ய வேண்டும். |

## காப்புறுதி வைப்பு / அங்கீகரிக்கப்படாத (தவறுதலான) கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் / செயற்படாக் கணக்குகள்

- வைப்பாளர் ஒருவருக்கு அதிகபட்சம் 1,100,000 ரூபாய் வரையிலான நட்ட ஈட்டுக்கான பொருந்தக்கூடிய காப்புறுதியை செலுத்துவதன் மூலம் நாணயச் சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் வைப்புப் பொறுப்புகள் காப்புறுதி செய்யப்பட்டுள்ளன.
- அங்கீகரிக்கப்படாத/தவறுதலான பரிவர்த்தனை ஒன்று கண்டறியப்பட்டால், அதனை உடனடியாக வங்கிக்கு அல்லது கணக்குப் பேணப்படும் கிளைக்குத் தெரிவிக்க வேண்டும்.
- ஒரு (01) வருட காலத்திற்கு பணம் மீளப்பெறல்/கொடுப்பனவு செயற்பாடுகள் எதுவுமின்றி கணக்கு செயற்படுத்தப்படாமல் இருந்தால், ஒரு வருட முடிவில் குறித்த கணக்கு 'செயலற்ற' கணக்காக மாறும்.
- இவ்வாறான கணக்குகள் 10 வருடங்களுக்கு மேலாக செயற்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் இல்லை என்றால், அந்த கணக்குகளில் உள்ள நிதி கைவிடப்பட்ட சொத்தாக கருதப்பட்டு இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பப்படும்.

## உங்களுடைய பின்னூட்டங்களை எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

- பின்வரும் வழிகள் மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் பின்னூட்டங்களையும் முறைப்பாடுகளையும் பகிர்ந்து கொள்ளலாம்;
- எங்கள் வாடிக்கையாளர் அனுபவ முகமைத்துவப் பிரிவு மூலம் உங்கள் பாராட்டுகள் / முறைப்பாடுகள் என்பவற்றை நீங்கள் பதிவு செய்யலாம். தானியங்கு அமைப்பு மூலம் உங்கள் கோரிக்கைகள் முன்னுரிமையுடன் கவனிக்கப்படும்.

**தொலைபேசி**: +94 11 220 4750 / +94 11 243 5814 தொலைநகல்: +94 11 243 5815 மின்னஞ்சல்: **bocexmgt@boc.lk** இணையத்தளம்: https://www.boc.lk

**அஞ்சல்**: வாடிக்கையாளர் அனுபவ முகாமையாளர், 22ஆவது மாடி, இலங்கை வங்கிக் கோபுரம், இலங்கை வங்கிச் சதுக்கம், இல. 1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.

எங்கள் கிளைகள், சேவைப் பிரிவு அல்லது அழைப்பு மையத்தைத் தொடர்பு கொள்ளுங்கள், எங்கள் கணக்குகள் அல்லது சேவைகள் தொடர்பான ஏதேனும் கருத்துகள்/சந்தேகங்கள் இருப்பின் எங்கள் கிளைகளை நாடலாம் அல்லது 1975 என்ற எண்ணின் ஊடாக அழைப்பு மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.